
# ஞானத்தெளிவு



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



# இறைவன்
# ஞானவெளி மெய்பிரான்
# ஞானசித்தர்

## திருச்சிற்றம்பலம்

உற்ற உறவும் உடையும் உறையுளும்
உணவும் ஊரும் ஊரினில் பேரும்

மற்ற மனிதர் மதித்திடும் பெருமையும்
மனதுற்ற இலக்கும் மண்முழுக்கச் சொத்தும்

கற்ற வித்தையும் காணும் சுகமும்
களிப்பிற் காய்செய்யும் கணக்கில்லா உழைப்பும்

பெற்றப் பணியும் பதவியும் யாவுமே
பேறெனக் கொண்டது உடலுக்கே போற்றி.

–திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

தெய்வத்தால் பலனும் தெய்வம்போல் வாழ்வும்
பெறவேண்டின் பெரிதொன்று மில்லைநின் மனந்தன்னை


பொய்யின்றிக் காக்கப் பொய்க்காது வாழ்வு
பொறைக்கொண்ட நெஞ்சே புலம்பியழும் புண்ணாகும்

செய்கின்ற செயலனைத்தும் செகத்துள்ளார் யார்க்குமொருச்
சிறுமைப் படாதிருக்கச் சிறப்புண்டுச் சீருண்டு

மெய்கொண்டு வாழும் மனதிற்கு மதிப்புண்டு
மேதினியில் விட்டொழிக்க வேண்டும்பொய் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அன்பொன்றே உயிர்க்கவசம் அன்பொன்றே ஆயுளுக்கும்
அமைதிவாழ் இல்லமாம் அருமருந்து உடலினுக்கு


அன்பொன்றே வழிதேடிப் பயணிப்பார் நிச்சயமாய்
அடைந்திடுவார் ஆண்டவனின் உறைவிடத்தை அகிலமெங்கும்

அன்பொன்றே துணையென்று ஆர்வமுடன் வாழ்பவரை
அழிக்கின்ற சக்தியில்லை ஆட்டுகின்ற பேயுமில்லை

அன்பொன்றே மொழியென்று அகத்துணர்ந்து வாழுங்கால்
அற்புதமும் அதிசயமும் அகப்படுமே போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

கண்மூன் றிருந்தும் கருத்தறியா திருப்பார்
கணக்கில்லா காட்சிகண்டு கருத்தழிந் திருப்பார்


மண்மூடும் மயக்கத்தில் மதியறியா திருப்பார்
மதிகாட்டும் குருபாதம் மதியாதே கிடப்பார்

பண்வாசந் தெரியாது பணமென்றே அலைவார்
பரனிருக்கு மிடமறியா பயணந்தான் செல்வார்

விண்தேடும் வித்தைக்கற் றுய்யாதே இறப்பார்
விரைந்துயிரைப் பற்றுதற்கு வழிகேளார் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

## ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளைத் தொழுதுதினங் காலைக் கடன்செய்வார்
இச்செகத்தில் இனிபிறப்பு அற்றிருக்க வழியமைப்பார்


சான்றோனா யாக்கவல்ல தந்தைபா தந்தொழுவார்
சாத்திரச் சாபமற்று இனிபிறப்புச் சாரார்

வான்கருத் தாக்கங்கொண் டிருக்குங் குருவடிக்கு
வாழ்த்துசெய் தேபணிவார் வாராரினி மண்ணில்

ஆன்றோர் தம்மறிவை ஆய்ந்தெடுக்குங் குணங்கொண்டார்
அகப்படார் கருப்பைக்குள்அறைந் திட்டேன் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அகரந்தந் தாதரித்த இன்பேயென் ஈசனே

உகரத்தோ டூறிநின்று என்னுள்நீ ஏற்றமுற்றாய்

ஒகரந்தான் ஓதுவார்க்கு ஔடதமாய் அஃதிருக்க

உண்மை உணரார்க்கு உள்ளறிவை ஊறவைத்து

தகரவித்தைத் தத்துவத்தைத் தராபர னாயிருந்து


தாரணிக்கு விளக்குதற்கு தடமிட்டாய் தண்டனிட்டேன்

வகரத்தை வாய்மொழியாய் வடித்துவைத் தேயுலகார்.

வழிபெற்று உய்வதற்கு வழிவிட்டாய் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அங்கென்றும் இங்கென்றும் அலையாது நெஞ்சிற்கு
அகத்துள்ளா னீசனென அறிவுதந் தாதரித்து
உங்கென் றுள்ளிழுக்கும் வாசியிலே ஓங்காரம்
உள்ளதென உள்ளுணர்த்தி உள்ளுணர்வால் அர்ச்சனைகள்
அங்கென்றால் அதிசயங்கள் ஆயிரந்தான் அகிலமிதில்
அனுதினமும் நடந்தேற அட்டமா சித்திதனை
பங்கமின்றிப் பையலுமே பயனுறவே பரிசளித்தப்
பரபொருளே அருவுருவே அடைக்கலந்தான் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அசலொன்று நகலாகி அவனியிலே அவதரிக்க
அகத்துள்ளே அறிந்ததனை ஐயனென் றருசிக்க


வசப்படுமே வானமொடு வன்மைமிகு பூதகணம்
வரிந்தழைத்துக் கும்பிப்பார் வளமாவார் வாழ்நிலையில்

நிசமாக நித்தியத்தை நிர்மலத்தை நீடுலகை
பெற்றிவரும் பேறுருவார் பேதிக்கா தேமனமே

வசமாகும் வழியிதுவே வன்புடனே பூசித்தால்
வையத்தில் நிகருனக்கு யாருண்டோ போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அஞ்ஞானந் தன்னை அகற்றுதற்குக் குருவடியை
அடையா தலைகின்றீர் அதிசித்தித் தருவதனை


எஞ்ஞான்றும் மறவாது ஏக்கமுடன் உள்வாங்கி
ஏற்றமுற முனைந்திடுவீர் ஏற்புடைய காலமிதே

விஞ்ஞானம் பெரிதென்று வீரியமாய் அலையாமல்
வித்தைக்கற் றுய்வதற்கு வழிதேடும் மாநிலத்தீர்

மெஞ்ஞானம் ஒன்றே மேதினியில் உயர்வாகும்
தஞ்ஞானம் அடையுதற்கு வழியிதுவே போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அடம்பிடித்து அழும்குழந்தை அகத்திருக்கும் வேகம்போல்
அறியொணா உள்ளுணர்வு ஆட்க்கொண்ட பேர்க்கன்றோ


வடம்பிடித்துத் தேரிழுக்கும் வாய்ப்பதுவும் வந்தமையும்
வலமிடமாய்க் குதித்தோடும் புரவிக்குக் கடிவாளம்

இடத்தெரிந்தார் இச்செகத்தில் இன்பநிலை எய்திடுவார்
இருவிழியும் ஒருவிழிபோல் இணைந்தொடுங்கும் இடந்தேடி

படம்பிடிப்பார் பாரிதனில் பக்குவமும் பெற்றிடுவார்
பரிந்துரைத்தேன் சுழிகண்டார் சுகம்பெறுவார் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அண்ணலேயென் றன்புடன் அடிபணி வார்க்கே
ஆருயிர் இரகசியம் ஈவார் குருபிரான்


வண்ணமாய் மறைத்த ஒளியிடை ஊறிய
வளமதா மிருளினை வாய்த்திடப் பண்ணுவார்

எண்ணமாய் விரிந்த எழில்மிகு வாழ்வினில்
எழுநிலை ஏறிட ஏணியு மாகுவார்

திண்ணமாய் இருந்தடித் தொழுதவர் தேறுவார்
தீதொழித் தன்பிலே திளைப்பரே போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அதனத னிலைக்கது வமைந்திடக் கண்டபின்
அழுதலைந் தோடிடும் அறிவிலார் தமக்கு


நிதநிதந் துன்பமுந் துயரமுந் தானே
நிம்மதி யென்பது மின்றியேப் போமே

பதம்பிரித் துண்மையைப் பகுத்தறிந் துய்பவர்
பாரினில் பயமிலா பக்குவம் ஏகுவார்

விதவித மாயுள வித்தாரக் கள்ளியை
வீசிடத் தெரிந்தவர் வீறுற்றார் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அந்தமும் ஆதியும் அறிவறிய வல்லார்க்கு
அற்புதந் தோன்றிடும் அகபிரமம் ஆகிடும்


சொந்தமாய் கோள்களும் பூதமும் உதவிடும்
சொற்பமா மாயுளும் சுத்தமாய் நீண்டிடும்

பந்தமாய் பாரினில் பார்ப்பவை யாவுமே
படிநிலை ஏறிடப் பக்குவம் ஈந்திடும்

அந்தர மின்றியே அருவுருத் தாண்டியே
அடையலாம் ஈசனை அன்புளோர் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அபரி மிதமாய் அண்டத் திருக்கும்
அறியவொணா வித்தை யாவும் தம்முளே
விபரித் திடவல்லார் வித்தாரக் கலைக்கெல்லாம்
வீரியம் போல்வராம் வித்தூன்றி வையத்தை
சுபரி தென்றேச் சொலவைத்துச் சொர்க்கத்தைச்
சுதந்தரிக்கச் செய்வார் சுத்தசிவ லோகத்தை
நபர்களுக் குணரவைத்து நரகமிலா மேல்நிலைக்கு
நகர்த்திடுவார் நயவஞ்ச மில்லாரே போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


## ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அம்மையே யென்று அகத்துணர்ந் தழைத்து
அப்பனே யென்று அறிவுணர்ந் தடங்கித்
தம்மையே இழந்தத் தவகுரு பிரானிடம்
தண்டனிட்டே கிடந்து தன்னுயிர் மார்க்கம்
செம்மையாய்த் தெரிந்து செல்வாக் கடைந்து
செகமுள சோதியைச் சிந்தித் திருப்பார்க்கு
வெம்மைத் திருநீறும் மெய்யடியார்க் கூட்டமுமே
வந்தணைந் திருக்கும் வகைதெரிவார் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அயன்மா லறியா அற்புதத் தோற்றம்
அடிபணிந் துதவும் குருபரன் பாதம்


மயன்முகந் தெரிந்தார் மயக்கங் கலைவர்
மண்ணினிவ் மதியுடன் மாபலம் பெறுவர்

தயவுடன் தன்னைத் தரிசித் தவர்க்கே
தரணியில் புத்தொளி யாகிடல் ஆமே

அயர்விலா ஐயன் திருவடித் தொழுது
ஆற்றினால் தொண்டு அவர்க்குண்டுப் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அரனென் றணுகி அருட்பெற முனைவோர்
அடிமுதல் நாதம் அறிந்திடல் வேண்டும்


பரனென் றுணர்ந்து பழகியே பழமைப்
பேற்றதைத் தானும் தெரிந்திடல் வேண்டும்

வரனென் றுயர்த்தி வாழ்த்தியே வணங்கி
வாழ்வின் இரகசியம் புரிந்திடல் வேண்டும்

சரமொன்று மறியா சடுதியில் விழைவார்
சத்துவங் காணார் சத்தியம் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அலகிலா தோங்கிய அருட்பெருஞ் ஜோதியை
அன்புடன் பிடித்து அகத்தினு ளடைத்து


பலமெலா மிதுவென பண்புட னுறைந்து
பனிமலர் தோற்றமாய் பாரினில் தெரிந்து

நலமெலாங் கூடிட நாளுமே உயர்ந்து
நானிலத் தவர்க்கே நல்வழி காட்டி

தலமொன் றுணர்ந்து தத்துவப் பொருளாய்
தானியங் கிடுவார் தம்மடிப் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


## ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அவமிலா திருக்க அய்யன் திருவடிக்கே
அனுதினமும் சரண்செய் நன்னெஞ்சே அதுவன்றி
தவமென்று மொன்றில்லை தன்னுயிரைத் தான்தேற்ற
தத்துவந் தெரிந்தாரைத் தானணுகா திருந்தால்
புவமீதுப் பிறந்ததற்கோர் பயனில்லைப் பாழாமே
புண்ணியஞ் சேருதற்கும் வழியில்லை வாய்ப்பில்லை
சிவமீது கரிசனைகள் செய்வதெனில் சிந்தித்து
சீர்தொண் டாற்றுவித்தால் சிறப்புண்டுப் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அழச்சொல்லித் தந்தார்ஆர் அகமகிழ்ந்து நகைத்திடவும்
அடிவயிற்றுப் பசிப்பெருக்கும் அறியாதே மூச்சிடவும்


பழக்கத்தில் வந்தமைய பரிந்துரைத்தப் பரன்தான்ஆர்
பார்த்தொன்றை மனம்பதித்துப் பக்குவமாய் பொருள்புரிந்து

வழக்கத்தில் கொள்வதற்கும் வகையுரைத்த வள்ளல்ஆர்
வடிவழகை வாழ்த்தி வான்மண்ணைப் போற்றி

இழப்பின்றி இன்பெய்த இறைநிலையை இருதயத்தில்
இருத்தியது மார்ஆர் இன்னவர்க்கே போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அளத்துயர்ந்த உப்புபோல் அகத்துயர்ந்த உண்மையே
மண்ணின் சாரம் விண்ணின் சாரம்
விளங்கநின்ற துண்மையே வித்தைக் கோடி
வித்தினை விரவிவிட்டு நெஞ்சிலே அத்தனோடு
மளமளவென் றோங்கவந்த அறிவிலே அன்பினோடு
வாய்மையும் வந்தமைந்த போதிலே அட்டசித்துக்
களத்தினைக் கருத்திலேற்றிக் காலமூன்று மாயையைக்
கலங்கிபோக வைத்தமெய் ஞானபாதம் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அறஞ்செய்வார் போல்நடித்து அனுதினமும் அலக்கைகை
அகப்படுவா ராகாமல் அத்தன் திருவடிக்கே
மறங்கொண்டு முனைந்து மனத்தென்றும் இணைந்து
மண்வாசம் நுகராது விண்வாசம் தனைஇழுத்து
குறம்பாடி குன்றணைந்தான் குறைகழன்றக் கழலடிக்கே
குற்றமிலா திருக்கக் குறிகொள் நன்நெஞ்சே
திறமிதென்றுத் திடங்கொண்டுத் திண்ணியனைத் தினம்பாடித்
தீதொழிப்பாய் பிறப்பற்ற நிலைப்பெறுவாய் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

அன்பொன்றே உனக்கு ஆயுதம் எனக்கொண்டு
அகங்காரம் தனைவிட்டு அகங்குளிரச் செய்திட்டால்
இன்பொன்றே இயல்பாக இல்வாழ்வும் சுகமாகும்
இருதயமும் தயவோடு கருணையுங் குடிகொள்ள
துன்பென்ற நிலைக்கே இடமில்லை இங்கே
துளியுமனங் கலங்காதே துணிவுடையார் ஜெயமுடையார்
என்றென்றுங் குருநாதன் தன்னடிக்கே சரண்செய்து
எவ்வுயிர்க்கு முறவாக வாழ்வாய்நீ போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


## ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

வாழுங்கால் வேண்டும் மண்ணில் மதிப்பெருக்க
வளர்நிலைக்கு மாற்றும் வான்சிந்தை அஃதினுக்கு
வீழுங்கால் தன்னை வீரியமாய் உருமாற்றி
வித்தைத்தந் தாதரித்து மண்மயக்கம் போக்கிப்
பாழுங் கொடுவினைகள் பாயாமல் புறம்போக
பாரிதனில் பரிதியென பார்வைக்குத் தனைக்காட்டி
ஊழும் வீழுமவர் உள்நினைவில் உனக்குந்தான்
ஊட்டுமவர் குருவாவார் உள்ளறிவாய் போற்றி!

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

# ஞானத்தெளிவு

திருச்சிற்றம்பலம்

ஓடுமிரு புரவிதனை ஒத்தடக்க வல்லார்க்கு
ஒன்மயனைக் காணுதற்கு வழிகூடும் வையத்தே
சாடுமிரு சரம்பார்த்து சராசரத்தைச் சரிகட்டி
சாதிக்க நினைப்பார்க்கு சடுதியில் பலங்கூடும்
ஆடுந்தன் மனதடக்க அறிவுரைகள் பெற்றுய்தால்
ஆகாச வாழ்விங்கு அருகுவந் தணைந்திருக்கும்
தேடுந்தன் குறிஒன்றாய் இறைமீதே பதிந்திருக்க
தேவாதி தேவகணம் வந்தடங்கும் போற்றி!

திருச்சிற்றம்பலம்